உ

சிவமயம்

பாண்டிநாட்டில் சமிவனமென்னும்

கோயிலூரில்

# ஸ்ரீ முத்துராமலிங்கசுவாமிகள்

வேதாந்த ஆதினத்தில்

ஷெ சுவாமிகள்சாக்ஷாத்அருளை பெற்றுவிளங்கிய

கண்டநல்லூர்

நாகலிங்க சுவாமிகள் வேதாந்த சிரவணோப

தேசாநுட்டான சீலசமாதி வைபவங்களை

அமைத்துச்செய்த பாசுரம்.

திருநெல்வேலி.

யூநியன் சென்றல் பிரசில்.

பதிப்பிக்கப்பட்டது.

1894-௵

KO… LIBRARY, KOVILOOR
A. No. 39254

உ

சிவமயம்

செல்வ விநாயகர் வணக்கம்

சீர்மலிதண் பொழிநிலவு கண்டனூர் மடமதனி
ற் சிறந்தசெல்வ, நார்மலியுள் ளன்பர்குழாம் வழி
படவங் கவர்வேண்டு நலங்களெல்லாங், கார்மலி
நீண் மழையெனப்பெய் தெந்நாளும் பெருஞ்செ
ல்வக் காட்சிநல்கு, மோர்மலிநற் செல்வவிநா யக
ன்பாத நிதமிறைஞ்சி யுன்னிவாழ்வாம்.

துறவுசாமிகள்.

துறவுபலர் புரிந்திருந்து மவ்வியலாற்பிரசித்தி
பிறர்பாற்றேயா, துறுதுறவுசாமியுயர் வேதாந்த
சமாதிநிலை யுற்றசெல்வம், நிறைபுகழ்சேர்கண்ட
னூர் வாழவந்ததவவாழ்வு நிமலமூர்த்தி, இறைவ
னருணசலத்தைநினைப்பவர்கண்முத்தியினை யெய்
தினரோ.

வயமிகுங்குரோதி சம்வற்சரமிதுனத்திலேவள
ர்தேதிமுப்பதொன்று, மகா வமரபட்சமுந்துவா

தசிரோகணிமாவெள்ளி தசகடிகையும், செயமிகு ஞ்சிம்மலக்கின் சுபதினத்திலே சின்மயானந்தவடிவே திகழுருவமாய்வந்த முத்துராமகுருசாமி சீரடிவணங்கிநாளு, நயமிகுந்துறவியாய்ச்சவணுதிமுழுதுமேநன்னிலையமாயுணர்ந்து, நன்மைபெறுராமேசுரங்காசி சென்றுமே நற்றுரிய நிலையைநாடிச், சுயமான சிவன்முத்திப்பதந் தன்னிலே சுகியாயிருந்துநாளுந், தூயவருணைசல சுவாமியும் விதேகச்சுபாவமதடைந்த தன்றே.

நாகலிங்கசுவாமிகள்.

திருவளர்தென்பாண்டிநாட்டிடைக்கண்டனூர் வாழ் சீர்வணிகர் தவமானோன் சிறந்தசமிவனத்தின் மருவளர்மெய்க்குரு முத்துராமவள்ளன்மகிழுவாய்ந்த குணக்கடலாகிவளர்ஞான வளத்தோன் பெருவளர் தன்னன்பர் தமக்கத்துவித வுண்மைபேசி டுவோநாகலிங்க தேசிகனும் பெயரோன் அருவளர் வற்சர விசயசித்திரைப் பூரணையிலகண்ட சிவபூரணமதாயினனென் கடைந்தே.

பங்குனித்திங்கட்பூரணையதனிற்பரமாத்துவித வுண்மைபகரும், மங்கள குருவாமுத்துராமப்பே ர்வள்ளல் பூரணவரம்புறுநாள், அங்கவனருள்சே ர் நாகலிங்கப்பேரண்ணன் மெய்ப்பூரணமதனிற் றங்கியதடுத்த சித்திரைத் திங்கட்டக்கமெய்ப் பூர, ணை நாளே.

௨

ஸ்ரீ பரமகுரவேநம:

ஆசிரியப்பா.

பூமலர்ப் பொகுட்டுறை புத்தேண் முதுவனு
மாமறு மருமத்து வண்டுளே வோனுமென்
றிருகில மேத்து மியற்பெருந் தலைவர்
பெருமையி னவர்க்கிணை பிறரில ரென்ப

அவர்தாம்

அன்னமு மேனமு மன்னுருத் தாங்கி
மேலுங் கீழு மூழி யூழி

காண்டகு விருப்பி னீண்டின ராக
அன்னவர் நடுவிற் றுன்னிய சோதி
கருணா கரமெனுங் காட்சி பொலிந்தும்
காண்டலுந் தீண்டலு மாண்டுநிக ழாது
தீவினை யதனிற் சிவணிய வியல்பிற்
ஞானத்தீ யூறென நாணா துரைப்ப
அருணா சலமெனு மவ்வுருத் தாங்கினேன்
தேவரு முனிவரும் யாவரும் வியப்ப
நஞ்சுகண் டத்துத் தஞ்செனக் கொண்டாய்
கவமின் றமர்ந்த சிவனென்ப ரன்றே
அத்தகு சிவன்றனக் குத்தம தலங்களில்
எண்ணில்பணி முடித்து நண்ணுமெய்ச் சீர்த்தியர்
சிவனடி யவரைச் சிவமெனப் போற்றுநர்
சிவநிறை பத்தியர் தவமலி வாழ்க்கையர்
கண்டியு நீறுங் கதித்தவைந் தெழுத்துஞ்
செல்வமெனப் போற்றுஞ்செல்வநன் கமைந்தோர்
சத்தியந் தவறா வத்தகு சால்பினர்
நாளொரு வண்ணம் பொழுதொரு வண்ணமா

ஆள்வினை யதனிற் பேறுறு நிதியினர்
தென்பால தாய தென்பாண்டி நாட்டில்
வண்பொலி தனிக வளமைசால் குடியினின்
நல்லலங் கற்பின் முல்லையந் தாரின்
வணிகர் குலத்தி னணுகினராகிச்
சேட்டனென் றினிமேற் காட்டுமெய் கவனாய்
நாட்டமூன் றுடைய நாயகன் றானே
மாறாட வுருவின் மருவித் தானுடை
உருவமு முதும் வெருவா வின்றிக்
காண்டலுந் திண்டலு மாண்டு நிகழ்வுற
எத்துணை யெளியரு மெய்த்தகு பயன்பெறக்
கண்டகு நல்வினை மண்டுநீ ரொன்று
கொண்டதன் னன்பர் குதுகுலித் துரைத்த
காரண மதனாற்போலுஞ் சிரணி
கண்டநல் லூரெனுங் கண்டநல் லூரில்
கொடையு முரிமையுங் கடிமலர்க் கண்ணி
பண்ண லடியர்பா னண்ணுவழி பாடுஞ்
செல்வமு மதற்கமை யொல்கு சீர்ப்பணிவும்

ஸ்ரீ

அன்பு மருளு மன்பொலி வாய்மையும்
அடுத்தவர் தம்மைக் கடுத்தலையொரீஇ
என்றுமோ ரியல்பிற் றுன்றுமின் மொழியால்
வெறுக்க வளிக்கு நிறைத்த மெய்க்கொடையான்
மாதரத் தளிக்கு மாதரமிகுதியும்
இன்ன குணங்கட்குத் துன்னுமா கரமாய்
நகரவா காரம் பகர வெகரமெனும்
இப்பெயர் விலாசத் தொப்புர வமைந்த
நன்மைசால் குடும்பத்து நயந்துவந் துதித்துச்
சேட்டன் கனிட்டனென நாட்டவர்புகழ
நண்ணிய மேன்மைப் புண்ணிய ரிருவருள்
அருணா சலமென வருட்பெயர் வாய்ந்தோன்
சேட்ட னென்ன நாட்டுவ ரன்றே
ஏகலிங் கமெனு மிறைபா லன்புறு
நாகலிங்கப் பெயர் நண்ணியோன் றானே
கனிட்டனென் றுலகிற் கழறுவ ரன்றே

அவர்தாம்.

தெய்வக் குலத்துச் சேயிழை மடவார்

கைவைத்த பந்து கழங்கு விளையாடும்
மாவீதி சூழ்ந்து மருப்பொழிற் புறஞ்சூழ்
சமிவன மென்னுந் தகைமைசால் சிறப்பிற்
கோயி லூரிற் குணங்குறி கடந்த
சச்சிதா னந்த நித்திய பூரண
வத்து வென்னு மத்தகு பிரம
ஞானதே சிகனென நன்மையி னமர்ந்த
கத்துதிரை யுலகின் மெத்திய பெருமை
முத்துரா மலிங்க முதல்வன் றனக்காங்
கிருகண் மணிகளா யியைந்தன ரன்றே,

அவருள்,

அருணா சலப்பெய ரருட்டே சிகன்சீர்
நெடுங்குடி யதனிற் கடுந்துற வடைந்து
துறவு சாமிகளெனத் தொல்லுல கெல்லாம்
மெய்வரிசை செய்யு மேன்மையும் பெற்று
யோகத்து யோகஞ் சாங்கிய யோகமென்
றுகு மிரண்டனு ளாகுலந் தீர்ந்த

அ

யோக யோகத் துயர்படி யேறி
மாகள யோகிகள் மதிக்க வமர்ந்து
குருபத மறவாக் கொள்கையி னின்று
தமிழ்நாட் டுள்ள தகுசிவத் தலங்கள்
பலவும் பணிந்து புலியூ ரமருநாள்
நடராசர் கனவி னவின்றவுத் தரவால்
காசினி புகழுங் காசியை யடைந்து
கங்கையிலாடிக் கடவுள் விசுவேச
லிங்கத் தமர்ந்தவி றைவனை வணங்கி
மூன்றுநா ளமர்ந்து மும்மலந் தவிர்த்து
முக்குற்ற நீங்கி முப்பகை கடந்து
மூன்றுட லொருவி மூன்றவத்தை கழன்று
மும்மதி லெரித்து முப்புரி தாண்டி
மூன்று நாளின் முப்பாழ் தவிர்த்து
முழுமுத லாய செழுமைசா லின்பப்
பிரமம தாகிப் பிறங்கின னன்றே
பின்னவ னுய பெருமைசால் குணத்தோன்
மாகலிங் கமுற்ற நாகலிங்க வள்ளல்

கமலபத் திரத்திற் கமலமே போல
இல்லறமென்னு நல்லறத்தமர்ந்து
சாங்கிய யோக சன்மார்க்க நின்றோன்
இல்லறத் தோருந் துறவறத் தோருமாய்த்
தன்னை யடுத்துத் தகும்பணி செய்து
பரந்துற நின்ற பக்குவர் பலர்க்கும்
ஆங்குமுன் குருமுகத் தடைந்துள சத்திய
நன்முறை யெதுவோ வம்முறை வழுவா
தவரவ ரறிவி னவரவர்கொள்ள
அத்துவித சாத்திர மெய்ப்பொருள் புகன்றோன்
பஞ்சதசப்பிர கரண மஞ்சொலிற் சீவன்
முத்திப்பிர கரண மத்தகு வாசு
தேவ மனன மெனப்பேசு வட நூல்கள்
செந்தமிழ்ச் செய்யுளின் முந்துறச் செய்தோன்
சாந்தமும் விசாரமுந் தனமெனக் கொண்டோன்
அருளு மன்புந் தெருளுமின் சொல்லும்
அடக்கமும் வாய்மையுங் கடக்கரு நோன்புஞ்
சிவமுந் தவமு முவமையில் சால்பும்

என்றுரை குணமெலாந் துன்றிய வடிவினன்
பாலரைப் போலப் பயின்றமெய்ப் பண்பினன்
ஞாலத் தெவரு மெவையுந் தனக்கு
கட்புறு பொருளென வொப்புர வமைந்தோன்
இலாபநட் டங்களு மானவவ மானமுஞ்
சயவப சயமு முதலிய வுபாதிகள்
தன்னைத்தீண் டாது தான்வெளியானோன்
யாவர் சொல்லுஞ் செயலு மிவையெலாம்
ஏக நாயக னியக்கமே யன்றி
வேறிலை யென்று மெய்மைகன் குணர்ந்து
நித்தியசந் தோட நிலைமையி னின்றோன்
காண்டவுங் கேட்பவு மாயவிவ் வுலக
மாண்புறு சின்மய வடிவமா மதித்தோன்
ஒருநாட் பழகினர் தம்மையும் பலகாட்
பழகின ராகப் பரிந்துப சரிப்போன்
சாதுச னங்கட்குத் தகுபுக லிடமாய்
அங்கவர் பெருமைநய நனகினி துணர்த்திப்
பிறரையு மவ்வழி பேணுமா செய்வோன்

இவ்வித குணத்தின் மெய்வரு சீலன்
குருவுரைத் தருளிய திருமொழி நின்று
சிவாலய தீர்த்தந் திகழுநந் தனவன
மடாலயஞ் சத்திர மகிழ்தண்ணீர்ப் பந்தர்
தருமசா லைகண்முதற் றக்கபுண் ணியங்க
டானே செய்துந் தன்னவர் செய்ய
வேவியு முறைக ளியைய வுரைத்தும்
கல்லாங் குடியெனுங் கர்னபுரிய,தனில்
எள்ளா தமைந்த விலக்கணம் பொருந்தச்
சிவபரஞ் சுடர்க்குச் சிவாலய மமைத்துப்
பவமலி கீர்த்தி பண்புற வாய்ந்தோன்
கண்டகல் லூரெனு மெண்டகு மூரிற்
சிவாலயம் புதிதாச் சிவணச் செய்தோன்
காரைக் குடியாக் கவினக் கொள்பொழிற்
சூரைக் குடியெனத் துலங்குபேர் பெற்ற
தங்குடிப் பழமைத் தகுசிவா லயத்தைப்
பணிசெய் துயர்ந்த பண்பினில் வைத்தோன்
இன்னும் பலபல பன்னூல் லறங்கண்

முடித்துவாழ் வனைத்து முற்றுறக் கொண்டோன்
ஒருக்கி முடித்துச் சுருக்கிச் சொல்லின்
சாந்தமே யோருரு வாகிய தகைமையோன்
அன்னோன்.
பங்குனித் திங்களிற் பரவுபூ ரணையிற்
றங்குரு வாய தகுமுத்து ராம
மன்பொலி வள்ளல் மனோவாக்கதித
இன்பம தாய வியல்பினை யோர்ந்து
குருவுஞ் சீடனு மெனுமுறை நோக்கி
முன்னும் பின்னு மாகக் காட்டித்
தானு மவனும் வேறென நின்ற
தானு விவகாரத் தமையுமே தவிரப்
பகரிரு வோரும் பரமார்த் தத்தில்
ஒன்றே யாகி நின்ற வைக்க
வண்பரி பூரண வத்துவா காரமே
யுண்மை யென்பதை வண்மையி னுணர்த்தக்
கருத்திற் கொண்ட காரணம் போலுஞ்
சிவன் சிவனெனச் செப்புநா நாத்துவ

வாய்மை விளங்க வருடங்கள் பலவுஞ்
சென்ற பின்னே ரொன்றிய வுரிமையாற்
குருசீட முறைமை கொள்ளமுன் பின்னதாய்
வருமிரு மாசு வகுப்பாற் றுவிதமுந்
திதியொற் றுமையாற் றிகழுமத் துவிதமும்
பூரணை யதனாற் பூரணப் பொலிவும்
போதரு புண்ணியப் புணர்ப்பு விளங்க
நானிலம் புகழ்நந் தனவரு டத்திற்
பங்குனித் திங்களிற் பகர்பூ ரணையிற்
கோயி லூரிற் குருபூசை நாளில்
விவகாரம் வேண்டா விதேக முத்தியே
விளங்குவ னென்னு மெய்ம்மையைக் குரவன்
சந்நிதி யதனிற் றகைமையிற் காட்டி
விசயவரு டத்ததாய் விளங்கி யடுத்த
சித்திரைத் திங்கட் டிகழ்பூ ரணையில்
இமையவர் பலரு மெடுத்துக்கை நீட்ட
இந்திர னென்னுஞ் சுந்தர புருடன்
வானாட்டின் வந்து மீனாட்சி சுந்தர

மணியைக் கடம்ப வனத்தமர் தேனை
யருபா ஞன்கு திருவிளை யாடன்
மரபுறப் புரிந்த மறைமுதல் வாழ்வைப்
பூசனை புரியும் புண்ணிய வேளையில்
அன்பரு மடியரு நன்குற வினரும்
தன்பெருங் குணங்க டகவுறத் துதிப்ப
அவர்க்கெ லாமரு ளன்புபா லித்து
மன்றுண்மா மணியு மகிழ்தரும் குருவும்
என்றுமென் னிதயத் திருந்தன ளொன்றுதன்
னுண்மையைத் தன்பா லுரிமையிற் சிறந்த
வன்மைசாலன்பர்க்கு வாலிதி னுரைத்தாய்
கவரொலா மவ்வழி யமைவுறு மாற்றுரல்
உறுதிமொழி யென்ன வுபதேச மளித்துந்
தன்னுறு பூரணச் சால்புறு சமாதி
மன்னிய நான்முதல் வருட முழுதும்
நாடுகா டெல்லா நன்னீர் வளத்தால்
ஓடையும் பொய்கையு முவப்புறு தடாகமுங்
காலுங் கழனியுங் கவின்பெற விளங்க

நன்மழை பெய்து நவதா னியங்களும்
மன்னுயிர்க் கெல்லாம் வரம்பில போகம்
துன்னுற விளைந்து துவன்றுமங் கலமும்
மணமுஞ் சோபன வாழ்வுகள் பலவும்
சோலையுஞ் சதுக்கமுஞ் சாலையும் வீதியும்
மடமுந் தடமும் முதலபல் விடந்தொறும்
தன்றுதி பலவுஞ் சாற்றுநர் தமக்கெலாம்
மேலும் மேலும் விளையு மனோரத
சித்திக ளெல்லா மொத்துநன் கமையப்
பெரியோர் சமாதி பேணிடி னதற்காங்
குரியன விவையென வுணர்வே வடிவாந்
திருமூல ருரைத்த சிறப்புக ளெல்லாம்
மருவிய மேன்மைதன் வழியடி மைகளாஞ்
சிடர்கள் போற்றப்பொன் னுடலர் பூமழை
சொரியப் பெருநிதி வணிகர்க ளெல்லாம்
உரியபொன் மழைநனி யுவந்தினி திறைப்ப
நகரெலாம் பேரணி நலங்கிளர்ந் தோங்க
வீதிக ளெல்லாந் தோரண நிரையும்

பூரண கும்பமும் பொலிந்து விளங்க
அரகர வென்றுங் கடியவர் துதிப்பத்
தன்குடிப் பிறந்த தனிச்சர்க ளாய
மன்பெருங் கிளையெலா வாழ்வுகனி பெறீஇ
இன்பமிக நுகர்ந்தாங் கெய்து நலம்பெற
அகண்டா கார வமலவி யாபக
சச்சிதா னந்த சதாசிவ நித்திய
சொச்சவத் துவித மெச்சிய பிரம
பூரண சொரூபமாய்ப் பொலிந்தன னன்றே.

(வேறு)

சீர்மேவும்விசயசம்வற்சரம்மேடரவிதேதியொருபத்தொன்பதிற், றிகழ்பானுவாரதினமாசுக்கிலபட்சமுஞ்செய்யபூரணைசோதிநாட், டிருவானசித்தியோகமும் விட்டிகரணமுஞ்சேர்கடிகைடன்னான்கினிற், செறிகடகலக்கினந்தன்னிலேநன்னயஞ்சேர்ந்திலகுமிந்தநாளி, லேர்மேவுபரதமதிநுவலந்தீவதினிலெழின்மேவுபாண்டிநாட்டி, விசைமேவு சமிவனந்தன்னி லுறைகொற்றவாளீசன

ருள்பெற்றுமுத்தி, யெய்துமொருமுத்தராமக்
குரவனருள்பெற்றவெவ்வைதசிவசிங்கைகருணை, எ
ழிலாக வயிராக ஞானமின்னுன்குமுருவெய்தினோ
ன்றருமமூர்த்தி, கார்மேவுமாணவமதென்னுமிடி
விடவடியர்கனகமௌனஞானமீவோன், காவர்த
தனவணிகர் பனவர்மணிமாடநிரைகண்டனூர்வந்
தவ்வூரிற், கரியகண்டப்பெருஞ்சோதியுண்மகிழ்
தரக்கட்டுவித்தவனாலயங், கருணைபுரியருளைநகர்
சூரைநகர்மூன்றினுங்கனபணிகள்செய்தகனவா,
னார்மேவு காமாதிமுக்குற்ற நீங்கினோனருடனிற்
கடலையனையா னருணாசலத்துறவுசாமிபிற்றோன்ற
ல்சபையாடுமெவனடிசூடுவோ, னரியநூல்சொல்லி
னோன்பெரியவேதாந்தமுடிவறிவணிகனுகலிங்க,
வண்ணன்மெய்ச்சச்சிதானந்தநித்தியசொரூபமாய
சிவமாயினனே.

வேறு.

தேமருவுவளம்பெருகுகோயிலூருசந்ததிருமுத்
துராமலிங்கதேசிகனாருட்கோர், காமருமாகரமாகி

௧௮

புண்மைவேதாந்தக்கடல்கடைந்துசுவாநுபவாகார
விறையமுதை காமருவவுண்டுதனையடுத்தவர்க்கு
மளித்தகவின்ஞானக்கொடைவள்ளனயந்துகண்ட
ஊரில், பாமருவாழ்வெனவமர்ந்தநாகலிங்ககுர
வன்பதமலர்கணிதமுன்னிப்பணிந்துரைத்துவாழ்
வாம்.

முற்றிற்று.

OVILOOR ANDAVAR
A. No 39254
RARY, KOVILOOR